## DEPOSITION OF WITNESS

**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARANTHANGI**

**Calendar**

**Miscellaneous**

**Preliminary Register** CC.No.73/2018

**Sessions**

| | | |
|---|---|---|
| **Deposition of witness for** | எதசா,1, | **Caste** |
| **NAME** | சண்முகப்பிரியா | **Calling** |
| **Father's Name** | ரசூல்முகம்மது | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1973 of the day of 08-10-2021

(சாட்சி crmp.5090/2021 28-09-2021 ஆம் தேதிய உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு மறு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**மறு விசாரணை**

நான் இதற்கு முன்பு இந்த வழக்கில் எனது தரப்பி சாட்சியம் அளித்துள்ளேன். நான் எதிரியிடம் 1,00,000/- ம் வாங்கியதாக சொன்ன பணத்தை நான் வாதி தரப்பில் கொடுத்து இருந்த புகாரின் பேரில் அறந்தாங்கி காவல் நிலையத்தில் ரூபாய் 40,000 த்தை ரொக்கமாக 2017 ஆம் வருடத்தில் வாதியிடம் கொடுத்தேன். மீதி தொகையில் 58,000 த்தை மூன்று தவணைகளாக ஒரு முறை 28,000 மும் ஒரு முறை 20,000 மும் ஒரு முறை 10,000 மும் என எதிரியின் கணவர் குமரேசன் கணக்கில் வைப்பீடு செய்துள்ளேன். அந்த தொகை வைப்பீடு செய்ததற்கான மூன்று வங்கிச் சலான்களையும் தாக்கல் செய்துள்ளேன். 26-04-2017 அன்று நான் குமரேசன் என்பவரின் கணக்கில் ரூபாய் 28,000 ம் செலுத்தியதற்கான கனரா வாங்கியின் சலான் எத.சா.ஆ.1. ஆகும். 12-06-2017 அன்று குமரேசன் என்பவர் வங்கி கணக்கில் ரூபாய் 20,000 ம் செலுத்தியதற்கான கனரா வங்கியின் சலான் எ.த.சா.ஆ.2. ஆகும். 28-06-2017 அன்று நான் குமரேசன் என்பவரின் கணக்கில் ரூபாய் 10,000 ம் செலுத்தியதற்கான கனரா வங்கியின் சலான் எ.த.சா.ஆ.3. ஆகும். (வாதி தரப்பில் எத.சா.ஆ.1. முதல் 3 ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பற்ற ஆவணங்கள் என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. அத்தகைய ஆட்சேபனை குறித்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணையில் எழுப்பிக் கொள்வது என்று முடிவு செய்து ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.) நான் எதிரியிடம்

98,000 ம் வரை கொடுத்துள்ளேன். நான் ரூபாய் 2.,000 ம் மட்டும் எதிரிக்கு கொடுக்க வேண்டியது. நான் வாதியிடம் ரூபாய் 1,00,000 ம் கடனாக பெற்று இருந்த போது பிணையத்திற்கு கொடுத்த ஆவணங்களை திருப்பி பெறவில்லை. நான் வாதியிடம் 8,70,000/- ம் கடன் தொகை எதுவும் வாங்கவில்லை. நான் வாதியை காசோலை கொடுத்து மோசடி செய்யவில்லை.

குறுக்கு விசாரணை

இல்லை.